**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.89/2024 , 90/2024 , 104/2024 & 105/2024 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு.கமல் |
| Husband/Father Name | சிகாமணி |
| Village /Area | பனப்பாக்கம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கிராம உதவியாளர் |
| Age | 59 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 06.03.2026.

**(எதிரிகள் 1,2,3,4,5,7,8,9 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 24.05.2020 அன்று நானும் கிராம நிர்வாக அலுவரும் அலுவலகத்திலிருந்த போது பானாவரம் காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் பனப்பாக்கம் பேருந்து நிறுத்தமிடம் சென்றோம். அப்போது பானாவரம் காவல் ஆய்வாளர் முனியான்டி, குகன், தமிழ்வானன் ஆகியோரை கைது செய்து விசாரித்து கொண்டிருந்தார்கள். ஒரு பைக், ஒரு செல்போன் பைக்கிலிருந்த ஒரு கத்தியை போலீசார் கைப்பற்றினார்கள். மேற்படி 3 நபர்களையும் போலீசார் விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் இட்ட நாளில் தான் நானும் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரிதான். எங்களுக்கு ஞாயிற்று கிழமை ஒரு நாள் விடுமுறை அன்று வீட்டில் இருப்போம்.

அலுவலகம் சார்நத வேலைகளை ஞாயிற்று கிழமைகளில் செய்ய மாட்டோம். முக்கியமான வேலையாக இருந்தால் செய்வோம்.

நான் ஒரே கையொப்பம் தான் போட்டேன். நான் கையொப்பம் இட்ட

தாளில் விவரங்கள் டைப் செய்யப்பட்டிருந்தது. நான் அந்த இடத்துக்கு செல்வதற்கு முன்பு நான் கையொப்பம் இட்ட தாள் டைப் செய்யப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான்.

டைப் செய்யப்பட்டிருந்த தாளில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் செய்ததால் நானும் கையொப்பம் போட்டேன்.

என்னை போலீசார் நேரடியாக அழைக்கவில்லை. கிராம நிர்வாக அலுவலரை அழைத்ததால் அவர் என்னை அழைத்து சென்றார். எனது உயர் அதிகாரியான கிராம நிர்வாக அலுவரான கூறியதால் நான் கையொப்பம் இட்டேன் மற்றபடி எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

என் முன்னிலையில் விசாரணை செய்து எழுதிய வாக்குமூலங்களில் நான் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னை விசாரண செய்தது ஒரு ஆண் போலீஸ் என்று சொன்னால் சரிதான்.

மற்றபடி வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலீசார் விசாரணை செய்து கையொப்பம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.06 18:35:04 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.